பக்கங்கள் எட்டு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா 5-00

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 21 வியாழக்கிழமை (05-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 206

## எம். பிக்களின் வாக்கின் பெறுமதி ரூ. 2½ கோடி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கெதிராகக் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெறுமதி இரண்டரைக்கோடி ரூபாவிற்கு மேல் விலை போகவுள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் நேற்றையதினம் "அரசியல் மார்க்கட்"டில் ஒரு வாக்கின் விலை இரண்டரைக் கோடி ரூபா வரை உயர்ந்துள்ளது.

ஒரு வாக்கின் இந்தப் பெறுமதி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு வரும் தினத்தன்று மேலும் உயரலாமென அரசியல் தரகர்கள் தெரிவித்துள்ளனர்.

(வ)

## யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் படையினரால் கைது

### விடுவிக்கக்கோரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் கடந்த இரண்டாம் திகதி உரும்பிராய் பகுதியில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட மாணவனை விடுதலை செய்யக் கோரி நேற்று அனைத்துப்பீட மாணவர்களும் விரிவுரைகளை பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். வளாகத்தின் அனைத்து கதவுகளும் மூடப்பட்ட நிலையில் மாணவனை விடுவிக்கக்கோரும் சுலோக அட்டைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன மாணவன் திவ்வியனை விடுதலை செய்யக் கோரி துணைவேந்தர் பேராசிரியர் பொ பாலசுந்தரம் பிள்ளை மற்றும் பீடாதிபதிகள் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்றுப்பிற்பகல் 3 30 மணியளவில் 512வது படைப்பிரிவின் பொறுப்பதிகாரியுடன் பேச்சு நடத்தினர்.

இதற்கு முன்னதாகமேற்படி மாணவன் தங்கியிருந்து கல்வி பயிலும் யாழ் பல்கலைக்

(8-ம் பக்கம் பார்க்க)

## ● ஜனாதிபதி விசேட அதிகாரத்தை பிரயோகித்தார்

# அவசரகால நீடிப்புப் பிரேரணை

# திட்டமிட்டபடி நாளை இடம்பெறா!

## 14 நாட்களுக்கு ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

**அவசர கால நிலையை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை திட்டமிட்டபடி நாளை வெள்ளிக்கிழமை (6ஆம் திகதி) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமாட்டாது.**

**ஜனாதிபதி சந்திரிகா தனது விசேட அதிகாரத்தைப் பாவித்து அவசர கால நீடிப்பு பிரேரணையை ஒத்தி வைத்துள்ளார்.**

அவசரகால நீடிப்புப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது நான்கு நாட்களுக்கு முன்னதாக அதுபற்றி பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் இம்முறை அவசர காலநீடிப்புப் பிரேரணை ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படவில்லை அதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் எதுவும் வெளியிடப்படவுமில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா தனது விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி அவசரகால நீடிப்புபிரேரணையை 14நாட்களுக்கு ஒத்திவைத்துள்ளார்.

தற்போதைய ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையில் அவசர

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சிக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசு மீது ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்தும், பொதுஜனஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களில் எம். பிகள் அமைச்சர்கள் ஆகியோரும் அடங்குவர்.

பிரபாகரனிடம் நாட்டை

(8-ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லா பிரேரணை ஆகஸ்ட் 7ம்,8ம் திகதிகளில் விவாதிக்க அரசு சம்மதம்

[கொழும்பு]

அரசுமீது ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை அடுத்தமாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் 10ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடத்துவதற்கு அரசு சம்மதித்துள்ளதாக அமைச்சர் ரிச்சட பத்திரண நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா தலைமையில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

மக்காவில் இருந்து திரும்பிய முஸ்லிம் காங்கிரசின் தலைவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தினம் இன்று

## படையினர் உஷார் நிலையில் யாழ்.நகர் நேற்று சுற்றிவளைப்பு

இன்று அனுஷ்டிக்கப்படும் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு யாழ். குடா நாட்டில் இராணுவத்தினர் மற்றும் பொலிசார் முழுஉஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நண்பகல் யாழ். நகரப்பகுதி முழுவதும் பெருமளவான படையினர் குவிக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டன.

போக்குவரத்து வாகனங்கள், பயணிகள் அனைவரும் நகருக்கு உள்ளே செல்லவிடாது தடுக்கப்பட்டனர். கஸ்தூரியார் வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதிகளில் பொதுமக்கள் தீவிரமாகச் சோதனையிடப்பட்டனர்.

சில மணி நேரம் யாழ். நகரப் பகுதியெங்கும் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்து

(8ம் பக்கம் பார்க்க)

### வன்னியில் கரும்புலிகள் தினம்

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னி பபிரதேசத்தில் கரும்புலிகள் தினம் எழுச்சியுடன் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப் படவுள்ளதாக புலிக

(8-ம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தாலுக்கு ஆதரவுதர 11கட்சிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாவதைக் கண்டித்து நாளைஇடம் பெறும் ஹர்த்தாலுக்கு பதினொரு தமிழ் முஸ்லிம் கட்சிகளும் தமது ஆதரவைத் தெரிவித்து நேற்று துண்டு பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர்.

துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

காரணமற்ற கைதுகள், தடுப்புக் காவல்கள், சித்திரவதைகள் சிறைக்கூட அவலங்கள் இவற்றுடன் பெண்கள் சீருடை யணிந்த காமுகர்களால் பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தப் படுகொ

(8-ம் பக்கம் பார்க்க)

## பெண்கள் மீது பாலியல் வல்லுறவும் படுகொலைப்பட்டியலும் நீள்கிறது

### யாழ். மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பெண்கள் மீது பொலிசார் மற்றும் அரசபடையினர் தொடர்ந்து நடத்திவரும் பாலியல் வல்லுறவுகள், இலங்கைத்தீவின் எப்பகுதியிலும் தமிழ்ப்பெண்கள் சுதந்திரமாகவும் மானத்துடனும் வாழ முடியாதென்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது.

இவ்வாறு பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுக்கு எதிர்ப்புத்தெரிவித்து நாளை நாளை நடைபெறவுள்ள பூரணஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து யா.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

95 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடம்பெயர்வுக்குப் பின்னர், அரசபடைகள் மற்றும் பொலிசாரின் மிருகத்தனமான நடவடிக்கையால், பாலியல் வல்லுறவுப் பட்டியல் நீண்டுசெல்கிறது.

[8-ம் பக்கம் பார்க்க]

# இரும்பு உறுதியும் இளகிய நெஞ்சமும் கொண்டவர்கள் கரும் புலிகள்

## கரும்புலிகள் தினத்தில் தலைவர் பிரபா

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1987ம் ஆண்டு யூலை மாதம் 5ம் திகதி தமிழ் மக்களால் மறக்கமுடியாதஒரு நாளாகும்.

ஸ்ரீலங்கா இராணுவம் வடமராட்சிப் பகுதியில் மேற்கொண்ட லிபரேஷன்ஒப்பரேஷன் இராணுவ நடவடிக்கை மூலம்வடமராட்சிப் பகுதியை கைப்பற்றி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பாரிய முகாமொன்றை அமைத்திருந்தது

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட அந்தப் பாரிய இராணுவமுகாம் மீது 1987ம் ஆண்டு யூலை மாதம் 5ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் தாக்குதலைமேற்கொண்டு ஸ்ரீலங்கா இராணுவத்திற்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தினார்.

வெடிபொருட்கள் நிரப்பப் பட்டவாகனமொன்றை இராணுவ முகாம்வரை கொண்டு சென்று அதனை குறித்தஇடத்தில் வெடிக்க வைத்து தனது உயிரை அர்ப்பணித்த தினத்தையே விடுதலைப் புலிகள் கரும்புலி தினமாக கொண்டாடிவருகின்றனர்.

1987யூலை 5ல் ஆரம்பித்த கரும்புலித் தாக்குதலானது தமிழீழப்போராட்டவரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

1993 யூலை 5ம் திகதி முதலாவது கரும்புலிகள் தினக் கொண்டாட்டத்தின் போது விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கரும்புலிகள் இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சத்தையும கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மனிதநேோற்றம படைத்தவர்கள் கரும்புலிகள் எனத்தொற்பதத்தில் கருமைமனோதிடத்தையும் உறுதிப் பாட்டையும் குறிக்கிறது,

இதுவேகரும்புலிகளின்வெற்றிக்குமூலாதாரமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

2001ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதிவரை 217 கரும்புலிகள் வீரமரணத்தை தழுவி உள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்,

217 கரும் புலிகளில், 78 தரைக் கரும் புலிகளும்,139 கடற் கரும்புலிகளும் அடங்குவர். இவர்களில் 160 ஆண் கரும் புலிகளும் 57 பெண் கரும் புலிகளும் இடம் பெற்றுள்ளனர். (ம)

## திருப்பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் ஆலய வாயில் காண்டாமணி மணிக்கூட்டுக் கோபுர புனருத்தாரணத் திருப்பணி வேலை இன்று பொறியியலாளர் கே. பூரணச்சந்திரனால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (உ)

## புதிய மாணவர் நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதிய மாணவர் நிலையத் திறப்புவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9. 00 மணிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் செ. கஜேந்திரன் ஆகியோரால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது. (உ-6)

## நிழற்படப்பிரதி இயந்திரம் அனுப்பிவைப்பு

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சு சுமார் ஒருஇலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நிழற்படப்பிரதி இயந்திரமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ள இந்த இயந்திரம் வெகுவிரைவில் கல்வித்திணைக்களத்தால் பேற்றடி பாடசாலைக்குக் கையளிக்கப்படவுள்ளது. (உ-52)

## அருணகிரிநாதர் விழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்றுகாலை930மணிக்குஆசிரியர் ஆ சிவநாதன் தலைமையில் அருணகிரிநாதர்விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில்,''ஆறுமுகமான பொருள்'' என்னும் தலைப்பில் தி செல்வமனோகரன்,''குருவாய் வருவாய்'' என்னும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்,''நாளென்செயும்'' என்னும் தலைப்பில் ஆசிரியர் ச.லலீசன் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை உதவி விரிவுரையாளர் ஸ்ரீ தர்ஷனனின் இசையரங்கும் இடம்பெறவுள்ளது. (செ)

## தேசியமட்ட போட்டிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 19 வயதின் கீழ் வலைப்பந்தாட்ட அணி, மாகாண மட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்கத் தகுதி பெற்றுள்ளது. (உ)

## 5 ஆயிரம் ரூபா அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி விஜயலட்சுமி, வல்வெட்டித்துறை வைத்திய சாலை அபிவிருத்திச்சபையின் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் பணிக்காக 5000 ரூபாவினை அன்பளிப்புச்செய்துள்ளார். (உ)

## 40 ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் மக்கள் வங்கியின் 40 வது ஆண்டு நிறைவுதினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது (உ)

## இளைஞன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்த மே மாதம் 24 ஆம் திகதி மணியம் கட்டத்தில் பயண அனுமதி பெறச்சென்ற வேளைபயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி காங்கேசன் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த நீர்வேலியைச் சேர்ந்தவிவேகானந்தா கமல்ராஜ் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்பட்ட போது குற்றச்சாட்சிகளை நிரூபிக்கபோதியசாட்சியங்கள் இல்லாமையால்இளைஞனை விடுவிக்குமாறு நீதிபதி இ த. விக்னராஜா உத்தரவிட்டார். (உ-6)

## நிறைவுநாளும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு நடத்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்கைநெறி தொகுதி 3 இன் நிறைவு நாளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் ஆடிமாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளதெனவும், ஏற்கனவே அறிவித்தபடி 7 ஆம் திகதி நடைபெறமாட்டாதெனவும் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். [உ]

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாடடுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக் கிழமை மு.ப 10 30 மணிக்கு, க.அருள்லிங்கத்தின் அறிமுகவுரையைத் தொடர்ந்து ''சும்மா இரு'' என்னும் தலைப்பில் சிவ தட்சணாமூர்த்தி சொற்பொழியாற்றவுள்ளார். (செ)

## விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

மக்கள வங்கியின் மனித வளப் பிரிவினால் ஒப்பந்த பயிற்சித் திட்ட அடிப்படையில் வங்கி உதவி அதிகாரிகள் முகாமைத்துவப் பயிற்சியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (உ-10)


University of Jaffna.
Sri Lanka
University Admission
Academic Year
2001 - 2002

A list of names of students who were selected for admission to the University of Jaffna for the above academic year has been received from University Grants Commission and has been displayed on all Notice Boards of the faculties.

Another list of 35 students has also been received from UGC whose admissions were not finalised. In this regard these students are requested to contact the UGC and finalise their admission and obtain letter of admission to do the registration.

Application form for admission will be sent individually by post to all selected students. The students are requested to get the registration done before 15th August, 2001 failing which action will be taken to fill the vacancies without delay.

REGISTRAR

C/2181


## போரில் மரணித்த படையினர் நினைவுத்தூபி தியத்தலாவையில் அமைப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டு உயிர்நீத்த இராணுவஅதிகாரிகளை நினைவு கூரும் நினைவுத் தூபியொன்று தியத்தலாவை படைமுகாமில் நிறுவப்பட்டுள்ளது.

இந்நினைவுத் தூபியை கடந்த வெள்ளிக்கிழமைஇராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல திறந்துவைததாா.

1971 ஆம் ஆண்டு முதல் கடந்தவருடம் வரை ஜே.வி.பி. மற்றும் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி உயிரிழந்த அதிகாரிகள் 677 பேரின் விபரங்கள் தூபியில் பொறிக்கப்பட்டுள்ளது.

தூபியில் பொறிக்கப்பட்டுள்ள 677 அதிகாரிகள் தரஇராணுவத்தினரில் இருவர் 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பியாடரின் தாக்குதலால் உயிரிழந்தவர்கள்.

ஏனையோர் 1983 ஆம் ஆண்டு முதல் கடந்த வருடம் வரையான காலத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களால் உயிரிழந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## இருசடலங்களும் ஒப்படைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியிலும் நவாலிப் பகுதியிலும் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாகக் கூறப்பட்டு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களையும் நாளைவெள்ளிக்கிழமை குடாக்கடல்ஊடாக புலிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சம்மந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-10)

## சந்தேகநபர் நேற்றுஆஜர்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்பகுதியில் பட்டப்பகலில் குத்திக்கொலை செய்யப்பட்ட பெண்ணின் மரணம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று யாழ்நீதவான் இ த விக்கினராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

சந்தேகநபரை இம்மாதம் 16ம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அதேவேளை சட்டவைத்திய அதிகாரியின் பிரேதபரிசோதனை அறிக்கையும் நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. (ந-6)

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார்கோவிலடி இராமநாதன்வீதியில் உள்ள அண்ணா பலசரக்குக்கடையில் அண்மையில் ஆயிரம்ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன

இதேவேளை கடைக்குமிக அண்மையில் இராணுவக் காவலரண் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

## மீனவர்களுக்கு 18 வரை மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐம்பது இந்திய மீனவர்களும், நேற்று யாழ் நீதவான் இ. த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலை எதிர்பார்த்து இம்மாதம் 18ஆம் திகதிவரை தொடர்ந்தும் மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ந- 6)

## அமைச்சராக மீண்டும் பேரியல்

கொழும்பு

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல்அஷ்ரப மீண்டும்தனது அமைச்சர்பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். நேற்றுமாலை ஜனாதிபதிமுன்னிலையில் கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சராகசத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். [ந-5]


திருமறைக் கலாமன்றம நடத்தும்
பாரம்பரிய கலைகள் பயிலரங்கு

மேற்படி பயிலரங்கானது நாட்டுக்கூத்து. இசை நாடகம், கிராமியக் கலைகள் தொடர்பான பயிற்சிகளை வழங்கும் நோக்கோடு எமது மன்றத்தால் இலவசமாக நடத்தப்படவுளது.

பயிற்சிக் காலம்: ஒரு வருடம்
விண்ணப்ப முடிவு திகதி: 22-07-2001
ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2393
[கி-2180]

### நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள

# கதவடைப்புப் போராட்டத்துக்கு

# அனைத்துத்தரப்பினருக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்படும் இளம் தமிழ்ப் பெண்கள் தொடர்ச்சியாகப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்படும் மிருகத்தனமான செயல்களைக் கண்டித்து நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பத்து தமிழ்க் கட்சிகளின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் நேற்று முன் தினம் பகல் 3 30 மணியளவில் யாழ் மாநகர சபை மேயர் என்.ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் ஈ பி ஆர் எல் எவ் சுரேஷ்அணி, சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் அமைப்பைச் சேர்ந்த யாழ்.மாநகர சபை உறுப்பினர் தவநாதன், சாவகச்சேரி நகரசபைத்தலைவர் அன்ரன்பொன்னையா மற்றும் ரெலோ உறுப்பினர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா அரசபடைகளினால் கட்டவிழ்த்து விடப்படும் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தினமும் அதிகரித்துக் கொண்டு போவதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது'

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் மிருகத்தனமான இத்தகைய செயல்களைக் கண்டித்து அமைதியான முறையில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தும், அரச கூட்டுத்தாபன கூட்டுறவு ஊழியர்கள் கடமைக்குச் செல்லாது வீடுகளில் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் வர்த்தக, திணைக்களங்களை மூடவும் மற்றும் போக்குவரத்து சேவையை தாமதமடையச் செய்தும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இப்பூரண ஹர்த்தாலுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வர்த்தக சங்கம், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் யாவும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் மேயர் என் ரவிராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ-10)

### ஆரம்பக்கல்வி

# பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

(கோப்பாய்)

கோப்பாய்க்கோட்ட ஆரம்பக்கல்விப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிய வருகின்றது.

கடந்த வருடம் இப்பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் கூடுதலானோர் ஆசிரியர் கலாசாலை சென்றுள்ளனர்.

இதைவிட கலாசாலை அனுமதியில் விடுபட்ட ஆசிரியர்களையும் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் இங்குள்ள ஆசிரிய கலாசாலைகள் ஈடுபடுவதாகவும் மேலதிகாரிகள் சிபார்சுக் கடிதங்களை வழங்கி வருவதாகவும் தெரியவந்துள்ளது. (உ-79)

# அடிகாயங்களுடன் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(மந்திகை)

உறவினர்களுடன் ஏற்பட்ட கைகலப்பில் அடிகாயங்களுக்குள்ளான ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று இரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் நெல்லியடி நாவலர் படத்தைச் சேர்ந்தகந்தசாமி தர்மகுலேட்டிஞ்சோதி (வயது47) என்பவரேடொல்லுகம் பிஅடிகாயங்களுக்குட்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-23)

# காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

1996, 97ஆம் ஆண்டுப் பகுதிகளில் யாழ். குடாநாட்டிலிருந்து காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர், பின்வருவோர் தொடர்பான விசாரணைக்கு அவர்களின் உறவினர்கள், சாட்சிகள் மற்றும் முறைப்பாட்டுக்காரர்களை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்குமாறு அறிவித்துள்ளனர்.

★ கே. அன்பழகன் (கோ-இலபி 1/435) கல்வயல் சாவகச்சேரி.

உறவினர் தர்மபூபதி கே. ஈசன் ஆகிய இருவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

★ தனபாலசிங்கம் கிருஷ்ணசிங்கம் (கோ. இல:பி.9/57) வாமகிரி கோப்பாய்.

துரைசிங்கமும், தாயாரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

★ நாகமுத்து சே. பிராஜ் (கோ.இல.பி 9/195) மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

முருகேசு நாகமுத்து இராசமணி நாகமுத்து ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

★ குஞ்சன் அருந்தவராசா (கோ:இல:பி-412) கைதடி மத்தி.

உறவினர், முறைப்பாட்டுக்காரர் அழைக்கப்பட்டுள்ளனர்.

★ சத்தியாஸ் பொன்னம்பலம் (கோ.இல:பி 9/211) கைதடி வடக்கு.

உறவினர், முறைப்பாட்டுக்காரர் அழைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைக்கு வரும் போது இவர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்ட ஆவணங்களைக் கொண்டு வருப்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

★ கந்தசாமி அழகரத்தினம் அம்மன்வீதி- சங்கானை

★ செல்லன் புலேந்திரன் கறுப்பு வீதி சங்கானை.

★ கந்தசாமி சுபாஸ்கரன் (கோ.இல.பி-405) மாவடிச் சந்திவட்டுக்கோட்டை மேற்கு.

சாட்சி:-ரேவதி

★ சின்னத்தம்பி சிவலிங்கம் (கோ.இல. பி-125) ஆஸ்பத்திரி வீதி சங்கானை.

சாட்சிகள்:-வல்லிபுரம் சிவலிங்கம், சின்னத்தம்பி-சாந்தலிங்கம் சொட்டடி யாழ்ப்பாணம்,

★ இமானுவேல் மரியயெசிலீ (கோ.இல பி-29) பலாலி வீதி கோண்டாவில்

சாட்சி:-கோபாலசிங்கம் ஜீவபாலன்;

★ ஜோசப் அல்போண்ஸ் மில்டன் (கோ.இல.பி-78) 54, விதானை லேன் சுண்டுக்குளி யாழ்ப்பாணம்.

சாட்சி;-தேவசகாயம் செல்வநாதன். (உ-10))

# இராசி பலன்

05/07/2001
(ஆனி 21, வியாழன்)
பூரணை மு. இ 8.50 வரை
மூலம் மு ப 8 46 வரை
ராகுகாலம் 1 27 - 2 57
நல்ல நேரம் - 7 27 - 8 57
பூரணை விரதம்

**மேடம்**
கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு, அரச ஆதரவு, முயற்சி தாமதம்.

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், அமைதிக் குறைவு, முயற்சி தடங்கல்.

**மிதுனம்**
செல்வாக்கு, வாகன வசதி, முயற்சி கைகூடும், தனவரவு.

**கடகம்**
பகைவர் விலகுவர், சுக வாழ்வு, திடீர் பயணம், முயற்சி நன்மை.

**சிங்கம்**
பிரயாண இடையூறு, வியாபாரச் சிறப்பு, திடீர நன்மை, முயற்சி தாமதம்.

**கன்னி**
உடல் சோர்வு, பதட்டம், காரிய தாமதம், தர்மம்.

**துலாம்**
முயற்சி நன்மை, வாக்கு மேன்மை, அந்நியர்சந்திப்பு, பிரயாணம்.

**விருச்சிகம்**
வீதண்டா வாதம், மாதர் நட்பு, பொருள் விரயம், காரிய தாமதம்.

**தனுசு**
ஜனவசியம், கற்பனை மிகுதி, புதிய பொருள் சேர்க்கை, புதிய முயற்சி.

**மகரம்**
வீண் அலைச்சல், பணவிரயம், நித்திரைக் குறைவு, பிதா சிந்தை.

**கும்பம்**
தெய்வ தரிசனம், மன மகிழ்ச்சி, காரியம் கைகூடும், தனவரவு.

**மீனம்**
தொழில் வெற்றி, நல்ல செய்தி, கடின உழைப்பு, அதிகாரம.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மணிபல்லவத்தில்மஹோற்சவம் 15 ஆம் நாள்



# 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

## சத்தாக மாறும் தீர்த்தம்

முத்தான சுவாமி கண்ட
முழுநயினைத் தீர்த்தம்;
சத்தாக மாறுமது
சக்திநீயும ஆட;
பித்தாக ஆர்ப்ப ரிப்பர்
பிணிதீர்க்க வேண்டி
எத்தாலும ஆடம்மா
இன்புற்று முழுக!

நயினைச் சோதி

## காத்தருள்வாய் அம்மா

ஆர்ப்பரிக்கும் நயினைதீவில் ஓசையுடன்
நர்த்தனமாடும் உன் கொலுசின்
ஓசை சேர்ந்து ஒலிக்க ... ...
நாகத்தின் மீதமர்ந்து நயினையிலே
அரசாட்சிபுரியும் நாகேஸ்வரியே
எங்கள் அகிலாண்டேஸ்வரியே நாகம்மா
நகரிழந்து நலமிழந்து நிற்கும்-நம்மை
காத்திடுவாய் நாகமா.

நீர்வையூர் சனா

## நிலையான வரந்தருவாய்

ஆதிக்கடவூரில் அம்பிகையே அபிராமி
நீதிக்கொரு தெய்வம் நீயன்றி வேறில்லை.
பாதித்திருவுருவம் பரமனிடம் கொண்டவளே
சோதித்திருவுருவே! சிவகாம சுந்தரியே!

அலைகடல் சூழ் நயினையிலே அம்மா
நீ அமர்ந்திருப்பாய்;
மலைமகளே, உமையவளே மக்களெமைக்
காப்பதற்காய்!
தொலை தூரத்திலிருந்து வந்து தொழுதோம்
உன் திருவடிகள்
நிலையான வரந்தருவாய் நெடுமாலுக்கிளையவளே!

மதிவாணர்

## ஏற்றமது காட்டு!

நல்லெழில் தீர்த்தம் நயினையில் காட்டி
அல்லல தீர்கக அருள்மழை பொழியும்
வல்லாள் நாகம்மை வருவாய் வீதியில்
எல்லோரும் தொழுகின்றோம் ஏற்றமது காட்டிடு

வேலணை பாலா

## ஆதரித்துக் காப்பாய்

அலை கடல் நடுவே குடியிருக்கும் எம் தாயே
அல்லல் போக்கி காத்தருள்வாய் நயினை எம் தாயே
ஆதி பராசக்தியம்மா எம் நாகபூசணித் தாயே
ஆதரித்துக் காத்திடுவாய் தமிழினத்தை நம் தாயே

திருமுருகராஜன்

## அருள் தாரும் அம்பிகையே!

நயினைப் பதிதனிலே உறைபவளே! இப்பிறவிப்
பயனதுவாய் உனைவணங்கும் பேறதனைத் தந்தவளே!
புளியந் தீவினின்றும் நாகங்கள் பூக்கொணர்ந்து
வழிபாடாற்றியதால் நாகபூஷணியாய் ஆனவளே!
அல்லலது போதுமம்மா! அகிலாண்ட ஈஸ்வரியே!
நல்லதொரு தீர்வு தந்து நமக்கு வழிகாட்டிடுவாய்!
ஓங்குமணி பல்லவத்தில் அமர்ந்திருக்கும் நாயகியே!
ஈங்கெமது இடர்போக்க இன்னருளைப் பொழிவாயே!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு

# பொலிஸ் உதவியாளர் பயிற்சித்திட்டம் யாழில் நேற்று முன்தினம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போக்குவரத்துக்கண்காணிப்புப் பிரிவுப் பொலிஸ் உதவியாளர்களுக்கான 10 நாட் பயிற்சித்திட்டம் நேற்று முன்தினம் யாழ் பொலிஸ் நிலைய அதிகாரி கொல்லுரேயினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் பொலிஸாருக்கு உதவியாளர்களாகச் செயற்படுவதற்கென வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் விசேட பணிப்பின் கீழ் மக்கள் நலன் புரிச்சங்க அங்கத்தவர்கள் 25 பேருக்கே நேற்று முன்தினம் இப் பயிற்சி ஆரம்பமானது.

இவர்களுக்கு யாழ் பொலிஸ் நிலையத்தில் வைத்து போக்குவரத்து விதிகள், அணி நடை, உடற் பயிற்சிகள் மற்றும் பலபயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும்,

பயிற்சி முடிவில் சீருடைகள் வழங்கப்பட்டு பின்பொலிஸாருக்கு உதவியாகக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், எதிர்காலத்தில் பொலிஸ் சேவையில் ஆட்சேர்ப்பு இடம் பெறும் போது இவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படவுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி கொல்லுரே குறிப்பிட்டார். (உ-10)

## கசிப்பு விற்பனையாளர் 32 பேர் நீதிமன்றில் ஆஜர்

[யாழ்ப்பாணம்]

சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைதுசெய்யப்பட்ட 32 பேர் கடந்த செவ்வாயன்று யாழ் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப் பட்டனர்.

இவர்களில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காசி முத்தர் என்பவர் 10 லீற்றர் கோடா வைத்திருந்த குற்றத்திற்காக 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் அறவிடப்பட்டு விடுவிக்கப்பட்டார். [உ-6]

## பல்கலை மாணவன் உட்பட மூவரை

# கைது செய்திருப்பதாக படையினர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவன் உட்பட மூவரைத் தாம் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாகப் படையினரால் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவனான உடுப்பிட்டியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி திவ்வியன் என்பவரை கடந்த 2 ஆம் திகதியும்,

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த மயில்வாகனம் லோகன் (வயது 21), கரம்பொன் மேற்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த செல்லத்துரை பாஸ்கரன் (வயது 21) ஆகியவர்களை கடந்த 3 ஆம் திகதியும் கைதுசெய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு கடந்த செவ்வாயன்று இரவு தொலைநகல் மூலம் படையினர் அறிவித்துள்ளனர். (உ-10)

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல- 23

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

[நேற்றைய தொடர்ச்சி]

51) நா. ஜெனோசன், யாழ். மத்திய கல்லூரி
52) கு. சேதுவன், யாழ். மத்திய கல்லூரி
53) வி. ஜெயதீபா, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்
54) பொ. சுயாந்தி, தம்பசிட்டி மெ மி த.க. பாடசாலை
55) ப. தாமரா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
56) ம. யாழினி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
57) சு. தாரணி, வதிரி மெ மி த.க. பாடசாலை
58) தி. கிருபன், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
59) பா. சாயிஷங்கர், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
60) க. சோபனா, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
61) அ அல்வின்ஸ் [illegible] மாதகல் சென் தோமஸ்
62) பெ. கலைவாணி, [illegible] ம ம. வித்தியாலயம்
63) சு விவேக், வல்வை சிவகுருவித்தியாசாலை
64) அ. ரம்யா, வல்வை ம.ம. வித்தியாலயம்
65) த. தர்சினி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
66) ச. யசிந்தன், மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
67) ச. கிருஷ்ணவேணன், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்
68) தி. அஜந்தா, மாதகல் வி வி
69) ம. விதுதியா, வல்வை. ம ம வித்தியாலயம்
70) இ. பாமா, துன்னாலை மெ.மி.த க. பாடசாலை
71) இ. திவாகரன், தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை
72) த. சோபிதா, வதிரி மெ மி த க. பாடசாலை
73) ச. மேரி அமலா, சென்தோமஸ் றோ.க வித்தியாலயம்
74) யோ. சாரங்கன், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
75) செ. மயூரா, கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்
76) பா. கிருஸ்ணபவான், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்
77) ப. ஜெயந்திரா, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
78) து. ரஞுவன், அளவெட்டி றோ.க.த.க. பாடசாலை
79) வி. வேணுஷா, கலட்டி மெ மி.த க. பாடசாலை
80) சி சேதினி, சுப்பர்மலை அ த க. பாடசாலை
81) இ நிராகுலன், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
82) பு. பிரசாந்தன், காரைநகர் தியாகராசா மகா வித்தியாலயம்

## நடமாடும் சேவை நடைபெறாது

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டில் நடமாடும் சேவையை நடத்தவென, இம்மாதம் 14 ஆம் திகதி சமூகசேவைகள் அமைச்சின் அதிகாரிகள் குழு இங்கு வரும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும்,

தவிர்க்க முடியாதகாரணத்தினால் திட்டமிட்டவாறு நடமாடும் சேவை இடம்பெற மாட்டாதெனவும், வேறு ஒரு தினத்தில் இச்சேவை இடம்பெறும் எனவும் சமூக சேவைகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். [உ-10]

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய திருநாள் திருப்பலி எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி திங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருநாள் வழிபாடுகள் தொடர்ந்து 9 நாட்கள் நடைபெற்று 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 7 15க்கு திருநாள் திருப்பலியுடன் நிறைவுபெறவுள்ளது.

செவ்வாய்க்கிழமை 10 ஆம் திகதி அருட்திரு அன்பு அடிகளின் தலைமையில் நற்கருணைவழிபாடும், 11 ஆம் திகதி அருட் திரு லூயிஸ் பொன்னையா தலைமையில் திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறவுள்ளது. (உ-7)

## 165 வது நிறைவுவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ் மானிப்பாய்மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 165 வது ஆண்டுநிறைவு விழாவும், பரிசுத் தினமும் இன்று பி.ப 1 45 மணிக்கு கல்லூரித் திறந்தவெளி அரங்கில் அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சு.நா. தணிகாசலம்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மெமோறியல் மலர் வெளியீட்டுரையை ஒய்வுபெற்றபிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் நிகழ்த்தவுள்ளார். (உ)

## கைந் நூல்கள் வந்தன

(மந்திகை)

தரம் ஒன்று முதல் 12வரையான வகுப்புக்களிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கைந்நூல்கள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வருடத் தொடக்கத்தில் அனுப்பி வைக்கப்படவேண்டிய மேற்படி கைந்நூல்கள் 6 மாதங்கள் கழித்து இங்கு வந்து சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-23)

## பத்திரிகையாளர் நிமலராஜன்

# படுகொலை விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பான விசாரணை நேற்று முன் தினம் யாழ். நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது இதுவரை நடந்த விசாரணைகளின் அறிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்தனர்.

நேற்றைய விசாரணைகளின் போது நீதிமன்றக் கட்டளைப்படி இந்தக் கொலை தொடர்பான தடயப் பொருட்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு பரிசோதனைகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், இந்தச் சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் கடமையில் இருந்த 10 படையினரின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி, இச்சம்பவம் நடந்த இடத்திற்கு அண்மையில் இருந்த காவலரண்களின் எண்ணிக்கை, அன்று கடமையில் இருந்த படையினர் எண்ணிக்கை.

அவர்களிடம்பெற்றவாக்கு மூலம் ஆகியவற்றைச் சமர்ப்பிக்குமாறும் இவ் வழக்கில்சந்தேகிக்கப்படும் நபர்களின் கைவிரல் அடையாளங்களை அரச கைவிரல் அடையாளப்பதிவாளரிடம் அனுப்பி பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்தார். (உ-6)

## கைதடி நாவற்குழி பாலங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிப்படைந்த கைதடி மற்றும் நாவற்குழிப் பாலங்களைமீள அமைப்பதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கென 30 கோடிக்கும் அதிகமான நிதி தேவைப்படுவதாகவும்,

அதனை பெருந்தெருக்கள் அமைச்சு, வடக்கின் புனர்வாழ்வு. புனரமைப்பு அமைச்சு ஆகியவற்றிடம் கோரியிருப்பதாகவும் வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர்எல். ஐ ஆர். குறூஸ் தெரிவித்தார். (உ-6)

## அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையை ஐ.தே.க. எதிர்க்கும்

(கொழும்பு)

அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி வாக்களிக்குமென கட்சியின் உப தலைவர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை கூடிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-5)

## தேர்தல் மோசடிகளை தடுத்து நிறுத்தும் திட்டம் வரையுமாறு பணிப்பு

(கொழும்பு)

கள்ளவாக்குப் போடுதல் உட்பட தேர்தல் மோசடிகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய நடைமுறைத் திட்டமொன்றை வரையுமாறுமேல் நீதிமன்ற நீதியரசர்கள் சரத் சில்வா, டீ பி எஸ். குணசேகரா பீ. எதுசூரிய ஆகியோர் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த தேர்தலில் நடைபெற்ற மோசடிகள் தொடர்பாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் சார்பில் அர்ஜுனா பராக்கிரம தாக்கல் செய்திருந்தமனுவொன்றை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

தேர்தலில் ஆணையாளருடான் கடந்த தேர்தலில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் பிரதிவாதிகளாகக் குறிக்கப்பட்டுள்ளனர். மனிதக்கொலை, குண்டுத் தாக்குதல்கள், வாக்குச் சீட்டுக்களை மோசடியான முறையில் வாக்குப் பெட்டிகளினுள் திணிந்தல், வாக்குப் பெட்டிகளை அபகரித்தல், ஆள்மாறாட்டம் செய்தல், துப்பாக்கிப் பிரயோகம் செய்தல், முகவர்களை மிரட்டுதல், அரசவாகனங்களை பயன்படுத்துதல் போன்றவற்றால்தேர்தல் நியாயமானதாகநடக்கமுடியாமற் போனதாகவும் அர்ஜுனா பராக்கிரம தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை கடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த இருவர் நேற்று முன் தினம் யாழ் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஆஜர்ப்படுத்தப் பட்டவர்களான கிளிநொச்சியைச் சொந்த இடமாகவும் பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் குமணன் என்பவரை ஒகஸ்ட்மாதம் 28 ஆம் திகதி வரையும்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த செல்வராசா செல்வரஞ்சன் என்பவரை இம் மாதம் 17 ஆம் திகதி வரையும் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும்வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-6)

## இளைஞனைக் காணோம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த பொன்னர் உதயகுமார் [வயது 20] என்ற இளைஞனைக் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் காணவில்லை என அவரின் உறவினர்களினால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள ரயர் கடை ஒன்றிற்குச் சென்ற சமயமே இவர் காணமற் போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## இன்று ஒரு தகவல்

# எதிர்காலத் தண்டனை

அரசனின் படுக்கையறையைப் பெருக்கிக் கொண்டிருந்தான் வேலைக்காரன். பட்டுமெத்தை, இனியசூழல், அரசன் வர நேரமாகுமென்ற எண்ணம்ஆகியவை அவனைப் படுக்கத் தூண்டின. ஆர்வத்தை அடக்கமுடியாத அவன் படுக்கையில் படுத்துத் தூங்கி விட்டான் அறைக்கு வந்த அரசன் தன் படுக்கையில் வேலைக்காரன் உறங்குவதைக் கண்டு கோபம் கொண்டான். 'யாரங்கே' என்று வீரர்களைப் பார்த்துக் கத்தினான். வீரர்கள் ஓடி வந்தனர். அரசனின் கூச்சல் கேட்டு வேலைக்காரனும் எழுந்தான்.

என் படுக்கையில் படுத்த இவனுக்கு என் கண் எதிரிலேயே நூறுசவுக்கடி கொடுங்கள் என்று கட்டளை இட்டான் அரசன். தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவன் எல்லா அடிகளையும் பொறுமையாகத் தாங்கிக் கொண்டான். வேலைக்காரனைப் பார்த்து அரசன் 'படுக்கையில் படுப்பதற்கு உனக்குச் சரியான தண்டனை கிடைத்தது. இனியேனும் ஒழுங்காக நடந்து கொள'' என்றான்.

இதுவரை பொறுமையாக இருந்த அவன் இப்பொழுது தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். வியப்பை அடக்க முடியாத அரசன் 'இப்பொழுது எதற்காக இப்படி அழுகிறாய்' என்று கேட்டான். அதற்கு அவன் நான் ஒரே ஒருமுறை இந்தப் படுக்கையில படுத்ததற்கே எனக்கு இந்தத் தண்டனை கிடைத்தது. நீங்கள் நாள் தோறும் இதில் படுக்கின்றீர்களே உங்களுக்கு என்ன தண்டனை காத்திருக்கிறதோ என்று நினைத்தேன். உடனே அழுகை வந்து விட்டது என்று பதில் சொன்னான்.',

பேராசிரியர் எ. சேரதி.

வைத்திய சாலைகளில்

# நிலவும் குறைபாடுகளைக்கண்டறிய மேற்பார்வையாளர் நியமிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசின் கீழ் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலையிலும், மாகாண அரசின் கீழ்செயற்படும் வைத்திபசாலைகளிலும் நிலவும் குறைபாடுகளைக் கண்டறியவும், அக்குறைபாடுகள் தொடர்பாக அறிக்கை தயாரித்து உடன் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது சார்பில் மேற்பார்வையாளர் ஒருவரை நியமித்துள்ளார்.

மேற்படி வைத்தியசாலைகளில் பல வருடங்களாக பல்வேறுபட்ட குறைபாடுகள் நிலவிவருகின்றமைகுறித்தும், இக்குறைபாடுகளை உடன் நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பல்வேறுபட்ட பொது அமைப்புகளும், பொதுமக்களும், வைத்தியசாலை அதிகாரிகளும் அமைச்சருக்கு கோரிக்கை விடுத்து வந்தமையையடுத்தே மேற்பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மருந்துப் பொருட்கள் மற்றும் கதிர் படங்கள் எடுக்கும் பொருட்கள் எடுத்து வருவதில் இருந்த கட்டுப்பாட்டினை பாதுகாப்பு அமைச்சுடன்தொடர்பு கொண்டு உடனடியாக அப் பொருட்கள் எடுத்து வருவதற்கான நடவடிக்கையினை அமைச்சர் மேற்கொண்டதும் தெரிந்ததே. (உ)

# ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள் செல்ல மக்கள் தயக்கம்

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதி ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களுக்குச் செல்ல மக்கள் தயக்கம காட்டுவதாகத் தெரிய வந்துள்ளது.

நிவாரணத்துக்கு வழங்கப்படும் பால்மா வகைகளை பொது மக்களிடம் மலிவு விலையில் வாங்கி தமது உற்பத்திக்கு ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள் பயன் படுத்தி வருவது தெரிந்ததே.

இந் நிலையில் அண்மையில் நிவாரணத்துக்கு விநியோகிக்கப்பட்ட பால்மாவை அருந்திய பலர் பாதிப்புற்ற நிலையில் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப் பட்டிருக்கின்றமையினால், தமக்கும் அந்நிலை ஏற்படுமோ என்ற அச்சம் காரணமாகவே முன்பு ஐஸ்கிறீம் விற்பனைநிலையங்களுக்கு முண்டியடித்துச் சென்றவர்கள் இப்போது தயக்கம் காட்டுவதாக அறிய முடிகிறது. (உ-41)

அரச தொடர்பு சாதனங்கள் மீது

# ஐக்கிய தேசியக் கட்சி கடும் கண்டனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிரானதும் அவற்றின் மீது அவதூறு ஏற்படுத்தும் வகையிலும் பொய்யான செய்திகளை உருவாக்கி, பத்திரிகை விபச்சாரத்தில் அரச தொடர்பு சாதனங்கள் ஈடுபடுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம சாட்டியுள்ளது.

அரச தொடர்பு சாதனங்களான லேக்ஹவுஸ், ரூபவாஹினி, ஐ.ரீ.என. மற்றும் இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகிய செய்தி ஊடகங்கள் விடுதலைப்புலிகளாமற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதிக்கும்வகையிலான செய்திகள், கட்டுரைகளை உருவாக்கி வெளியிடுகின்றன.

அரசுக்கு சாதகமான செய்திகளை மாத்திரமே வெளியிட்டு வரும்அரசசெய்தி ஊடகத்துறை எதிர்க்கட்சியினரையும் விடுதலைப்புலிகளையும் தாக்கும்வகையிலும் அவர்கள் மீது சேறு பூசும் நோக்கிலுமே செய்திகளை வெளியிடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் மேலும்குற்றம் சாட்டியுள்ளனர் (இ)

# மீனவர்கள் மீட்கப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த மூன்று இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் காப்பாற்றி. நீர் கொழும்பு பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இம் மீனவர்களை இந்தியாவுக்கு அனுப்பிவைக்க நீர் கொழும்பு பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அரசரட்ணம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (இ)

# பாராட்டிக் கௌரவம்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி செல்லக் கதிர்காமம் கோவில்உற்சவ காலங்களில் தொடர் தெய்வீகப் பேருரையாற்றி வரும் ஆசிரியர் ச. லலீசனைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா தீர்த்த உற்சவ தினமான இன்று ஆலய விழாச் சபையினரால் நடாத்தப்படவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ)

# உரிய ஆவணங்கள் இல்லாத மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டன

[யாழ்ப்பாணம்]

இலககத தகடுகள், சாரதி அனுமதிப பத்திரம், ஆகியவை இல்லாத 50 இற்கும் அதிகமான மோட்டார் சைக்கிள்களை. கடந்த சில தினங்களில் குடா நாட்டின் பல்வேறு பாகங்களிலும் மோட்டார் சைக்கிள் சாரதிகளிடம் பறிமுதல்செய்ததாக போக்குவரததுகண்காணிப்புப்பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள மேற்படி மோட்டார் சைக்கிள்களில் அவசியமான உரிய பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டவை உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும்,

ஏனையவை தொடர்ந்தும் பொலிஸ் நிலையததில உளளதாகவும் யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இவ்வாறான தமதுநடவடிக்கைகள் தொடரும் எனவும், இதன் மூலம் களவு, விபத்து ஆகியவற்றைத் தடுக்க இயலும எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

பரு. பஸ் நிலையத்தில்

# மலசல கூடம் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டது

(புலோலி)

பருத்தித்துறை நகரசபையால் கட்டப்பட விருந்த பஸ் நிலையத்துடன் கூடிய மல சல கூடம் பருத்தித்துறை வர்த்தகர்களின் எதிர்ப்பால் தற்காலிகமாக கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ்நிலையத்தில் பிரயாணிகள் தங்குமிடமும் பொது மலசலகூடமும் அமைப்பதற்காக பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுத்த போதும்தற்போது பஸ் நிலைய பிரயாணிகள் தங்குமிடம் மட்டுமே அமைக்கப்படவுள்ளதாகநகர சபை பதில் தலைவர் என். மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை வர்த்தகர்கள் 50 பேர் இணைந்து பஸ் நிலையத்தில் மலசல கூடம நிர்மாணிக்கப்பட்டால் பொதுமக்களுக்குபாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும்.

இம்மலசல கூடம் அமைக்குமநடவடிக்கைகளைத்தடை செய்யுமாறும் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவருமான ஐ சிறிரங்கேஸ்வரன், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பருத்தித்துறை நகரமுதல்வர் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரைக் கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. [உ-52]

# கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வலிமேற்குப் பிரதேச கலாசாரப் பேரவைக்கான பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை மு. ப 10.00 மணிக்கு சங்கானை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நிர்வாக சபைத் தெரிவும், பிரதேச கலாசார அபிவிருத்தி தொடர்பான உரையாடலும் நடைபெறவுள்ளதால் அந்தப் பிரதேச கலைஞர்களையும், ஆர்வலர்களையும் வருகை தருமாறு பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார். (உ)

# யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் பலவற்றிலும் மிகுந்த ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிய வந்துள்ளது.

400 இற்கும் அதிகமான ஆசிரியர்கள இவ்வாண்டு ஆசிரியர் கலாசாலைகளுக்குத் தெரிவானதையடுத்தே பாடசாலைகளில் இப்பற்றாக்குறை நிலை எழுந்துள்ளது.

இதேவேளை, தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் பட்சத்தில் இக்குறைபாடு போக்கப்படும என எதிர்பார்க்கப்பட்ட போதிலும்,

அந்நியமனங்கள் வழங்குவதில் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருவதானது மாணவர் கல்விச் செயற்பாடுகளில் பின்னடைவினை ஏற்படுத்தி வருவதாகப் பெற்றோர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுளளது. (உ)

# ஆலய புனரமைப்புக்கு 26 இலட்சம் ஒதுக்கு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள இந்து ஆலயங்களுக்கு வடககு புனர்வாழ்வு அமைச்சின் நிதியிலிருந்து 26 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யபபட்டுளளதாக ஈ.பி டி.பி அமைப்பின் உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளர் பரஞ்சோதி ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலய புனரமைப்புக்கு6இலட்சம் ரூபாவும் வதிரிகாளையன் தோட்டம் முத்துக் குமாரசுவாமி கோயில் வசந்த மண்டபம் அமைப்புக்கு 6 இலட்சம் ரூபாவும் பொலிகண்டி வீரபத்திர ஆலயப்புனரமைப்புக்கு 10 இலட்சம் ரூபாவும் கப்பூது வீரகத்தி பிள்ளையார் கோயில் புனரமைப்புக்கு 4 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தவிர, கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை புனரமைப்புக்கு 6 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-23)

# பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் பொதுக்கூட்டம் அளவெட்டி நாகவரத நாராயண சுவாமி தேவஸ்தனத்தில் எதிர்வரும ஞாயிற்றுக்கிழமை 8ஆம் திகதி இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ)

# குருபூர்ணிமா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்றுகுருபூர்ணிமா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதனையொட்டி காலை 9.00 மணி தொடக்கம் காயத்திரி மந்திர ஜெபம், பாத பூஜை, பண்ணிசை, பஜனை. ''நல்ல குருநாதன்'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (செ-104)

## எரிகாயத்துடன் வைத்தியசாலையில் அனுமதி

உணவு தயாரித்துக் கொண்டிருந்த வேளை வலி ஏற்பட்டதால் அடுப்பில் இருந்த பாத்திரத்தின் மேல்வீழ்ந்த குடும்பப் பெண் பலத்த எரிகாயங்களுடன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மல்லாகம் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் 2 பிள்ளைகளின் தாயாரான மாலினிஜெயராஜ் வயது-28) என்பவரே எரிகாயங்களுக்குள்ளானவராவார். (உ-12)

உலக தரிசனம்

# பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில்

# 154 பேர் ஸ்தலத்தில் துடிதுடித்துப் பலி

## ரஷ்யாவில் சோகச் சம்பவம்

(மொஸ்கோ)

**ரஷ்யாவின் பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த அனைவரும் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளனர்.**

**விபத்துக்கான காரணம் பற்றி பல்வேறு ஊகங்கள் எழுந்துள்ள நிலையிலும் உண்மைக் காரணங்களைக் கண்டறியும் வகையில் விமானத்தின் கறுப்புப்பெட்டி தேடப்பட்டு வருகிறது.**

ரஷ்ய பயணிகள் விமானம் ஒன்று வி த்துக்குள்ளானதில் அதில இருந்த விமானச் சிப்பந்திகள உட்பட 154 பேர் பலியாகியு ளனர்

ரஷ்யாவின்கிழக்கு நகரான உறிலஸில் இருந்து புறப்பட்டு இக்கு ஸ் நோக்கிச் சென்ற விமானமே நேற்று முன்தினம் மாலை சவ்பீரியப பகுதியில் விபத்துக்குளளாகியது.

மேற்படி விமானம் இரண்டு தடவைகள் அவசரமாக தரையிறங்க முற்பட்டது எனவும் மூன்றாவது தடவை அது சுமார் 30 கிலோ மீற்றர் உயரத்தில் இருந்து வீழ்ந்து தீப் பற்றிக் கொண்டதாகவும் ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்பொழுது விபத்து நடைபெற்ற இடததில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதுடன் மீட்புப் பணியாளர்கள் விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்பு பெட்டியையும் தேடிவருகின்றனர்.

பலியானவர்களில் பலர் வேறு நாட்டவர்கள எனவும், பெண்களும் குழந்தைகளுமே அனேகர் எனவும் தெரியவந்துள்ளது. (உ 9)

## தீர்ப்பாயத்தின் முடிவுக்கு மிலேசெவிக் கண்டனம்

[பெல்கிரேட்]

தனக்கெதிராகத் தொடுக்கப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின் தீர்ப்புபொய்யானது எனவும் சட்டவிரோதமானது எனவும் யூகோ முன்னாள ஜனாதிபதி மிலேசெவிக் கண்டனம்தெரிவித்துள்ளார்.

இத்தீர்ப்புக்கு ஐ நா பொதுச் சபையால் அங்கீகாரம்வழங்கப்படாததால்இதில் எவ்வித உண்மையும் இலலையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேட்டோ அமைப்பினால் அமைக்கப்பட்ட இத்தீர்ப்பாயம் கடந்த 8 ஆண்டுகளாகப் பல்வேறு வழக்குகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. [உ-9[

## அவுஸ்.செல்லும் சட்டவிரோத குடியேற்றக்காரர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கன்பரா)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் படகுகள் மூலம் வருவோரின் எண்ணிக்கை இந்த வருடம் குறைவடைந்துளளதாக அவுஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது.

இவ் விடயத்தில் தாம் கடைப்பிடித்து வரும் கடுமையான சட்டதிட்டங்கள் காரணமாகவே சட்டவிரோதமாக நுழைவோரின் எண்ணிக்கையில வீழ்ச்சி ஏற்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## மத்திய அமைச்சர்இருவரும் தமிழக அரசால்விடுதலை

### தொண்டர்களும் படிப்படியாக விடுதலை

(சென்னை)

அண்மையில் தமிழகபொலிஸாரால் கைது செய்யப்பட்ட மத்திய அமைச்சர்களான கே ஆர் பாலு, முரசொலி மாறன் எனபவர்களை விடுதலை செய்ய தமிழக அரசு முன்வந்துள்ளது.

இரு அமைச்சர் கள் மீதும் சுமத்தி உள்ள குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெற்றதுடன் அவர்களை விடுதலை செய்ய தமிழக அரசு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது

இதேவேளைகடந்த 5நாட்கள பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 32 ஆயிரம் தி மு.க தொண்டர்களை படிப்படியாக தாம் விடுதலை செய்து வருவதாகவும் தமிழ் நாட்டுப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (உ-9)

## கோவைச் சிறையில் முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிப்பு

(சென்னை)

கோவைச் சிறையில்கடுத்து வைக்கப்பட்டுள்ள திமுக தொண்டர்களால் நேற்று முன்தினம் முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிகக்ப்பட்டது.

நூற்றுக் கணக்கான தொண்டர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்ட போதும், சிறைக் காவலர்களால் பின்னர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டது. (து)

## கலைஞர் கைதான வேளை

# ஒளிப்பதிவானவீடியோ நாடாவை

# ஜெயா அடிக்கடி பார்த்து மகிழ்வு?

(சென்னை)

கடந்த சனியன்று தமிழக முன்னாள் முதலவர் மு கருணாநிதி கைது செய்தமை தொடர்பாகப்பிடிக்கப்பட்ட வீடியோக் கொற்றை முதல்வர் செல்வி ஜெயலலிதா கடந்த ஞாயிறன்று தனது வீட்டில் இருந்து அதிகாலை முதல் மாறி மாறிப் போட்டு ரசித்தார் என்று தமிழகப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுளளது.

கருணாநிதியின் கைதுச் சம்பவத்தை பிரத்தியேகமாகப்படம் பிடிக்க இருவீடியோ கமராக்காரர்களை ஜெயலலிதா ஏற்பாடு செய்திருந்தார் என்றும்.

இக் கைதுச் சம்பவத்தை செல் போனில் நேர்முக வர்ணனை செய்வதற்கும் ஒருவர் நியமிக்கப் பட்டிருந்தார் என்றும் இதனைக் கேடபதற்காக அவர் அன்றைய தினம் நள்ளிரவில் மேற்கொள்ள இருந்த குருவாயூர் பயணத்தை ரத்துச் செய்தார் என்றும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுளளது

இதே வேளை, கருணாநிதி கைது செய்யப்பட்ட விவகாரம் தனக்குத் தெரியாது எனவும், எல்லாம் நடந்த பின்பே தான் அறிந்துகொண்டதாகவும் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே. (உ-9)

## கனடாவில் சாதனைபுரியும் தமிழ் இளைஞர்கள்

(ஒட்டாவில்)

கின்னஸ் புத்தகத்தில்தமது பெயர்கள் பொறிக்கப்பட வேண்டும் என்ற ஆவல் கொண்ட தமிழ் இளைஞர்கள பலர் கனடாவில் புதுவிதமான சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கனடாவின் முக்கியதினம்ஒன்று கடந்த 30 ஆம் திகதி கொண்டாடப்பட்ட வேளையில் வர்ணம் தீட்டப்பட்ட தேங்காய் துருவலில் கனடாவின் தேசிய சின்னத்தை பொறித்து இவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

மூவாயிரம் தேங்காய்களிலிருந்து துருவப்பட்ட பூவை இவர்கள் கோலம் போடுவதற்கு பயன்படுத்தியதாகவும் அதுவே உலகிலேயே மிகப் பெரிய கோலம் என்றும் தெரிவித்துள்ளனர்.

கின்னஸ் புத்தகத்தில் இச் சம்பவம் பதியப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்ற போதிலும் சம்பந்தப்பட்ட தமிழ் இளைஞர்கள்பலரும் தமது பெயர்கள் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறுமா என்று ஆதங்கத்துடன் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாயிரத்திற்கும் மேலான இளைஞர்கள்இம் முயற்சியில் ஈடுபட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-07)

## கருணாநிதி,ஸ்டாலின் கைது காரணங்களை விளக்கி விரிவான அறிக்கை

(சென்னை)

முன்னாள் முதல்வர் மு கருணாநிதியும் சென்னை மாநகர மேயர் ஸ்டாலினும் ஏன் கைது செய்யப்பட்டனர் என்பது பற்றி விரிவான அறிக்கை ஒன்றை தமிழகக் காவல் துறையினர் வெளியிட்டுள்ளனர்.

அவர்களது அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த கால தி.மு.க ஆட்சியில் 10 பாலங்கள் கட்டுவதற்கு ஒப்பந்தம் மேற்கொளளப்பட்டிருந்தது: சென்னை மாநகரில் முக்கிய சந்திப்புக்களில் மேமபாலம் கட்டுவதற்காக 366 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இபபணத்தில் 12 கோடி50 இலட்சம் ரூபாவை கருணாநிதி சூறையாடியதுடன் மேயர் ஸ்டாலின் தான் விரும்பிய இடங்களில் பாலங்களை அமைத்துள்ளார்.

அரசுதுறை தேர்ந்தெடுத்த இடங்கள் கைவிடப் பட்டுள்ளமை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## இயலாமையின் பிடிக்குள் கலைஞர் கருணாநிதி

(சென்னை)

சிறையிலிருக்கும் முன்னாள் முதல்வர் மு கருணாநிதிக்கு இரத்த அழுத்தம் கூடியிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

கருணாநிதியின் கால்களில் வீக்கம் கூடிவருவதாகவும் தோள்பட்டைகளில் வலிகள் ஏற்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள தெரிவித்தன.

இதேவேளைநேற்று மு கருணாநிதியை அவரதுமனைவியும் மற்றும் அரசியல் பிரமுகர்களும் சென்று பார்வையிட்ட பொழுது முச்சக்கர வண்டியிலிருந்து கொண்டே உரையாடினார். (து)

## மத்திய அமைச்சர்கள் விடுதலை தொடர்பாக முரண்பட்ட தகவல்கள்

(புதுடில்லி)

பிரதமர் வாஜ்பாய் கேட்டுக் கொண்டதால் தான் மத்திய மந்திரிகளான முரசொலி மாறனையும், பாலுவையும் விடுதலை செய்ததாக செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சென்றிருந்த தமிழக அமைச்சர்கள் ஜனாதிபதி, அத்வானி, பிரதமர் வாஜ்பாய் மற்றும் உள்துறை அமைச்சர்களைச் சந்தித்து கருணாநிதி மற்றும் மந்திரிகள் கைது செய்யப்பட்டமை சம்பந்தமான அறிக்கையை சமர்ப்பித்ததாகவும் வீடியோ படச்சுருள்களைக் கையளித்ததாகவும அவ் வேளையிலேயே பிரதமர் கைதானவர்களை விடுவிக்கும் படி கேட்டுக் கொண்டார் என்றும் ஜெயலலிதா தெரிவித்தார்.

இதேவேளை, மத்திய அரசு குறிப்பாக உள்துறை அமைச்சு ஜெயலலிதாவின் கூற்றை மறுத்துள்ளதுடன் விடுவிக்கும்படி கேட்கவில்லையென்றும் தமிழக அரசுக்கு கைது தொடர்பாக எச்சரிக் கைக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது. (து)

## இளம் பெண்கள் அறுவர் கொலை

(அல்ஜீர்ஸ்)

கிழக்கு அல்ஜீரியாவில் ஆறு இளம் பெண்கள் இனந்தெரியாத அயுததாரிகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அல்ஜீரியாவின் எல்லைப் பகுதியில் உள்ள நகரான டெபிசாவின் இரவு விடுதி ஒன்றில் தங்கியிருந்த ஆறு பெண்களே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

இரவுவிடுதியின் காவலாளியும் அப்போது கொலை செய்யப்பட்டுளளார்.

கடந்த சில ஆண்டுகளில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அல்ஜீரிய மக்கள் அரச படையினரால் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [உ-9]

## 13 நாகா கெரில்லாக்கள் இராணுவத்திடம் சரண்

நாகாக் கிளர்ச்சிக் காரர்களின் மற்றொரு குழு இந்திய இராணுவத்தினரிடம் சரணடைந்துளளது.

நாகலாந்துத் தலை நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் 17 நாககெரில்லாக்கள் தங்களது ஆயுதங்களைச் கையளித்து விட்டு இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

எனினும்,இக்கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக குற்றங்கள எதுவும் பதியப்படாததால் அவர்களுக்கு உடனடியாக மறு வாழ்வு அளிக்கப்படும் என்று இராணுவத் தளபதி கருத்துக் கூறியுள்ளார். (உ-9)

அகலாது அணுகாது தீக்
காய்வாய்வர் போல்க இகல்
வேந்தன்சேர்ந்தொழுகுவார்

குறள்

# வலம்புரி

## பயத்தின் வெருட்டல்

ஆளும்பொது ஜனஐக்கிய முன்னணிஅரசுக்கெதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னதாக நாளை நடைபெறவுள்ள அவசர காலச் சட்டத்தின் மீதான வாக்கெடுப்பு அரசுக்கு பெரும் பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளது,

225 பாராளுமன்ற உறுப்பினர்களில் சபாநாயகரை விடுத்தால் 224 பாராளுமன்ற உறுப்பினர்களில் எத்தனை பேர் தமக்கு அதரவாக வாக்களிப்பார்கள் என்பதை அரசினால் திடமாகக் கணிப்பிட முடியவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் ரவூப் ஹக்கீம் குழுவினர் எந்தப் பக்கம் சார்வார்களென்பதைத் திட்டவட்டமாகக் கணிப்பிட்டுக் கொள்ள முடியாதநிலையில் அரசின் பயப்பீதி, வாக்கெடுப்பு எண்ணும்வரை நீடிக்கவே செய்யும்.

நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் மாறி மாறிக் கொண்டு வந்த அவசர காலச் சட்டம் தமிழர்களைப் பழிவாங்கும், சித்திரவதைப் படுத்தும் நோக்கை உடையது. இச் சட்டத்தினால் எத்தனையோ அப்பாவித் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் வருடக்கணக்கில் விளக்கம், விசாரணையின்றி சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளனர்.

மனித நேயத்திற்கு அப்பால்சித்திரவதைக் கொடுமை சர்வ தேசத்தையும் உலுக்கியுள்ளது. அந்தளவில் சிங்களப் பேரினவாதிகளுக்கு அவசர காலச் சட்டம் உதவி வருகிறது.

தமிழர்களை சிறைக் கூண்டில் அடைத்து வதை செய்வதற்கான அவசர காலச்சட்டம் மாதமாதம் கூடிபாராளுமன்றில்நிறைவேற்றப்படுகிறது.

நாட்டின் எந்தப் பிரச்சினைக்கும் பாராளுமன்றம் கூடாவிட்டாலும் அவசர காலச் சட்டத்திற்காக மாதமொருமுறை கூடி தமிழரை வதைப்பதற்கான அனுமதியைப் பெற்றுவிடும். அவசர காலச் சட்டத்தால் தமிழர்கள் விட்ட கண்ணீர் இப்போது திரண்டு அதே அவசர காலச் சட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் அரசையே ஆட்டங்காணச் செய்துள்ளது.

ஓர் இனத்தை அடக்க, ஒடுக்க எண்ணினால் இருந்த ஆசனத்தையே இழக்கவேண்டி வருமென்பதை இப்போதாவது இலங்கை அரசு புரிந்து கொள்ளுமா என்பதுகேள்விக் குறியே.

# நயினை அம்பிகை மேல் நம்பிக்கை வைத்தால்

# நல் வரங்களீந்து நம்மையெல்லாம் காப்பாள்

ஏகன்-அநேகனாக அண்ட சராசரங்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன். அந்த இறைவனுடன்ஒன்றாய்-பலவாய்விரிந்து பிரிக்க முடியாமல், இவ்வுலகெங்குமாய் நிற்பவள் சக்தி இதையே 'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்' என்று திருவருட்பயன் கூறுகிறது

இறைவி மும் மூர்த்திகளுக்கும் மூத்தவள். முனிவரும் தேவரும், மூவரும் அகிலாண்ட கோடிகள் அனைத்துமே அவளது குழந்தைகள். தூயோரைக் காத்து- தீயோரைத் திருத்துவதற்காகப் பல்வேறு திரு நாமங்களுடன்பல இடங்களில் அவள் உறைந்திருக்கின்றாள்.

### சக்திபீடங்கள்

அன்னையின் அருட் பொலிவுள்ள சக்தி பீடங்கள் அறுபத்து நான்கென ஆன்றோர் புகல்வர். காஞ்சியிலேகாமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், மதுரையிலே மீனாட்சியாகவும், நாகபட்டினத்திலே நீலாயதாட்சியாகவும், உறையும் மகா சக்தியானவள். நயினையிலே நாகபூஷணியாக எழுந்தருளியிருக்கின்றாள்.

சின்னஞ் சிறிய நயினாதீவிலேபென்னம் பெரியவளாகிய அன்னை ஈசான மூலையில் வீற்றிருக்கின்றாள்.

கொந்தளிக்கும் ஆழ்கடலின் அலைகள் ஆலய கிழக்கு மதில்மேல் மோதி ஓம் ஓம் என ஓசை எழுப்ப-இயற்கை எழில் கொஞ்சும் வேப்பம் சோலைகளின் நடுவே- ஐந்து தலை நாகபட நிழலின் கீழ் அலங்கார பூஜிதையாக வீற்றிருந்து, தன்னை நாடி வரும் அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றாள் அன்னை;

### புராதன ஆலயம்

அம்பிகையின் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றினை அறிவதற்கு, சாசன ஆதாரத்துடன் நிரூபிக்கத்தக்க எதுவித சான்றுகளும்இதுவரைகிடைக்கப் பெறவில்லை. பிரபல இந்திய, இலங்கைத் தொல்பொருள் ஆய்வாளர்களினதும் சிற்ப சாஸ்திர வல்லுநர்களினதும் நவீனமுறையிலான ஆய்வுகளின்படி ஆலய கருவறையிலே காணப்படும் ஐந்து தலை நாக உரு பல ஆயிரம் வருடங்கள் பழமையானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

'மனித வரலாற்றில் மிகத் தொன்மையான 'நாக வழிபாட்டின் கலப்பற்ற, உன்னதமானபண்பிற்குஎடுத்துக்காட்டாக விளங்கும் மிகவும்புராதன ஆலயம் நயினாதீவு ஸ்ரீ நாகபுஷணி அம்பாள் ஆலயமே' என்பது தென்னிந்திய

**மு.நா.நடராசா**

(நயினாதீவு)]

சிற்ப சாஸ்திர வல்லுநர் எம் நரசிம்மன் அவர்களது கருத்தாகும்.

### சிலப்பதிகாரம்

சிலப்பதிகார காலச் செட்டிமார் வியாபாரநிமித்தம் கடற் பயணங்கள் மேற்கொண்ட போது இச் சிறுதீவில் தங்கிச் செல்வது வழக்கம் ஒரு முறை மாநாய்கன் என்னும் பெயருடைய செட்டி ஒருவர் இக் கடல்வழிப்பயணம்செய்கின்ற போது. அம்பிகை யைத்தரிசிப்பதற்கு மலர் கொண்டு வந்த நாகபாம்பினை கருடன்ஒன்று வழிமறித்துத் தாக்க முயல்வதைக் கண்டான்: கருடனிடம் இருந்துபாம்பினைக்காப்பாற்றிய செட்டி நாகம் சென்ற வழியே தன் மரக்கலத்தையும் ஓட்டிச்செல்லுமாறுசட்டளையிட்டான். பாம்பு சென்ற வழியே சென்றசெட்டி பாம்பானது இத்தீவிற்குவந்து வன்னிமரநிழலிலேவீற்றிருந்த அம்பிகைக்குதான் கொணர்ந்த மலர்களால் அர்ச்சிப்பதைக் கண்டான். அம்பிகையின் திருவருளை வியந்த மாநாய்கன் தான் கொண்டு வந்த திரவியங்கள் அனைத்தையும் செலவு செய்து அம்பிகைக்கு ஆலயம் அமைத்தான் நயினார் பட்டர் என்கின்ற பிராமணரையும் பூஜைக்கு அமர்த்தினான்.



### நாகபூஷணி

நாகத்தாலே பூஷிக்கப்பட்டமையினால் அம்பிகை நாகபூஷணி என அழைக்கப்படுகிறாள். நயினார் பட்டர் இத்தீவிலே குடியிருந்து அம்பிகைக்கு பூஜை செய்தமையால் இத்தீவு நயினாதீவு என அழைக்கப்படுகிறது.

''ஆதி சக்தி ஷா மதேவி
பார்வதி
நீலி துத்தியார் நீண் நாக
பூஷணி''

என்று அருணகிரி நாதர் தனது திருப்புகழிலும்

''. . . ஈசன் அரவிந்த
பாதத்
தொண்டர்கள் நிறைந்திடும்
இலங்கை
நயினார் தீவு துதி செய்யும்
படியமைந்தோய்
சுரலோக லோகேந்திர நர
லோக புவனேந்திரர்
தொழு வாழும் நாகேஸ்
வரியே.''

என்று பல நூறு வருடங்களின் முன்பு வாழ்ந்த வீராசாமிச் செட்டியார் தனது பாடலிலும் அம்பிகையை விதந்து போற்றுவது நோக்கற்பாலது.

### பாண்டிய சிற்ப முறை

தற்போதைய அம்பிகையின் ஆலயமானது ஆகம விதி முறைகளுக்கு அமைவாக பாண்டிய சிற்பக்கலைப் பணியில் அமைந்துள்ளது.

சுயம்புருவான ஐந்து தலை நாகத்தையும் அம்மனையும் கொண்டிருக்கும் மூலஸ்தானமும், இரு நிலை விமானமும், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம் என்பனவும், கிழக்கு தெற்கு வாசல் இராச கோபுரங்களும், விநாயகர், புவனேஸ்வரி, சுப்பிரமணியர், சண்டேஸ்வரி, வைரவர், சூரிய சந்திரர், நவக்கிரகங்கள், நால்வர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்குரிய கோவில்களும் கர்ப்பக்கிருகத்தின் புறச் சுவர்களில், நிருத்த கணபதி, கௌமாரி, வைஷ்ணவி, அபிராமி, துர்க்கா ஆகிய கோஷ்ட தேவதைகளுக்குரிய பஞ்ச கோட்டங்களும் மிகவும் சிறப்பாக அமைந்து, எழிலும், ஏற்றமும் தெய்வீகமும் ஒருங்கு சேரப் பெற்று விளங்குகிறது ஆலயம்.

பெரிய புராணத்தில் இடம் பெறும் அறுபத்து மூன்று நாயன் மார்களின் திருவுருக்கள் சுதைச்சிற்பங்களாக ஆலய உள் வீதியின் மேற்குப்புற சுவர்களையோரம்அமைக்கப்பட்டிருப்பது யாழ்: குடாநாட்டில் வேறு எந்த ஆலயத்திலும் காண முடியாத ஒன்றாகும்.

### யாத்திரைத்தலம்

தினம் தினம் நூற்றுக்கணக்கான அடியவரின் யாத்திரைத்தலமாக விளங்கும் அம்பிகையின் ஆலயத்தில், வருடாந்த உயர் திருவிழாக் காலங்களில் குடா நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும்பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் அவள் நிழல் நாடிவருகின்றார்கள்.

யுத்தம் என்னும் அரக்கனின் கோரப்பிடியிலே சிக்குண்டு உறவுகளை, உடைமைகளை ஏன் உணர்வுகளைக்கூட இழந்தவர்கள் தாயே நீ தான் தஞ்சம் என்று ஓடிவருகின்றார்கள்;

அம்பிகையின் அருட்கோலக் காட்சி மெய்மறக்கச்செய்யும். மெய்தான் அரும்பி விதிர் விதிக்கும். நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக. கண்ணீர் ததும்பி உள்ளம் வெதும்பும்- பேசாதவர்கள் பேசுவார்கள்- ஆடாதவர்கள் ஆடுவார்கள்; தங்கள் துன்பங்களைத்துயரங்களை குறைகளை எல்லாம் அன்னையிடம் முறையிடுவார்கள். அம்பாளிடம் சொல்லி விட்டோம் அவள் தீர்த்து வைப்பாள் என்கின்ற நம்பிக்கையுடன் அமைதியாகத்திரும்பிச் செல்கிறார்கள்.

## சாயி அருளமுதம்



உடம்புடனும், உடம்போடு சம்பந்தப்பட்டவற்றுடனும் கொண்டுள்ள அதீத பிணைப்பிலிருந்து மனிதன் எப்பொழுது விடுபடுகின்றானோ அப்பொழுது அவன் மகிழ்ச்சி, துயரம், நல்லவை, கெட்டவை, இன்பம்துன்பம் ஆகியவற்றின் தாக்கங்களிலிருந்தும் விடுதலை பெறுகின்றான். சாந்தம், உறுதி. தளப்பமில்லாத சம நிலை ஆகியவற்றில் அவன் நிலை நிறுத்தப்படுகிறான். இறைவனுடன்ஒன்றுபட்டதே உலகம் என்பதைஅங்கே காண்கிறான். அனைத்தும் ஆனந்தம். அனைத்தும் அன்பு; அனைத்தும் பேரின்பம் என்பதைக் காண்கிறான்; தானே இப்புறத்தோற்ற உலகென்பதையும், பல்வேறு தன்மைகளாகத் தோற்றமளிக்கும் புறக்காட்சிகள் யாவும் இறைவனுடைய சங்கற்பத்தினாலேற்படும் கற்பனைகளேயெனவும் உணருவது மட்டுமின்றி, அந்தத் தெய்வீக சங்கற்பம் தன்னுடைய உண்மையான ஸ்வபாவமாகிய சத்தியப் பொருளேயன்றி வேறல்ல என்பதையும் உணரப் பெறுகிறான். பிரபஞ்சத்தின் முனைகளை உள்ளடக்கக் கூடிய அளவுக்குத் தன்னை விரிவுபடுத்திக் கொள்வதேமனிதனின் மிகவும்உயர்ந்த சாதனையாகும். ஞானிகளும், முனிவர்களும் பல வருடங்கள் பிரார்த்தித்து, தவமியற்றிப் பெறக் கூடிய அனுபவமாகிய அதி உயர்ந்த ஆனந்தத்தை இந்த வழியினால் பெற்றுக் கொள்ள முடியும்.

நன்றி

**நாளாந்த நற்சிந்தனை.**

## நல் அருள் அமுதம் தருக!

வாயினில் உன்பெயர் உச்சரித்து
வடிவழியா உன்உரு மனத்தகம் இருத்தி
நயினையில் உள்ளவென்னுயிர்குயிராம்
நல்லமுதமே தேனேயுருகி உனைப்பணிந்தேன்
போயினி யுலகப் பொய்மை வாழ்வினில்
புகுந்துழன்றவமே கெட்டுக்கிடவாமலுன்
சேயிவ னென்றே உலகிடையிருத்தி
சாற்றற்கரிய அன்னார் அருள் அமுதம்தருவாய்

**நா. நவராஜ்**
அ. இல:-44
கொழும்புத்துறை

# ஜெயலலிதாவின் உத்தரவில் கருணாநிதி விடுதலை



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதி நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 1ஆந் திகதி அதிகாலை வேளையில் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட கலைஞரை விடுதலை செய்யுமாறு உச்ச நீதிமன்ற நீதிபதி அசோக் குமார் நேற்று உத்தரவிட்டார்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா விடுத்த உத்தரவையடுத்தே கலைஞர் கருணாநிதி நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

முதுமை காரணமாகவும் மனிதாபிமான அடிப்படையிலுமே கருணாநிதி விடுதலை செய்யப்படுவதாக முதல்வர் ஜெயலலிதா விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை செய்யப்பட்டாலும் அவர் மீதான வழக்குத் தொடரப்படுமெனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மத்திய சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கலைஞர் கருணாநிதி தி.மு.கவின் அறிவாலயத்திற்குச் சென்று பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசினார்.

தன்னைக் கைது செய்த போது பொலிஸார் தாக்கியதில் தனது கை பாதிப்படைந்துள்ளதாகவும், ஒரு கடிதத்தைக் கூட எழுத முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது கையின் இடலாமையை செய்தியாளர்களிடம் காட்டிய கருணாநிதி அச் சந்தர்ப்பத்தில் கண்ணீர் விட்டு அழுதார்.

இவ்வாறிருக்க மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறன், ரி. ஆர். பாலு ஆகியோர் மீதான வழக்கு வாபஸ் பெறப்பட்டதுடன் அவர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முரசொலி மாறன் நேற்றைய தினமே வீடு திரும்பினார். (ந)

### ஹர்த்தாலுக்கு

...லைசெய்யப்பட்டு வருகின்றனர்.

கிருஷாந்தி, ரஜனி, கோணேஸ்வரி சாரதாம்பாள் மற்றும் கமாற்லிறா என பாலியல் வல்லுறவிற்குப் பலியான பெண்களின் பட்டியல் நீண்டு செல்கிறது.

இவற்றை இல்லாதொழிக்க நாளைய ஹர்த்தாலில் அனைவரும் இணைந்து துணிந்து நிற்போமென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

### யாழ். :. -

கழக விடுதிக்குச் சென்ற பொலிஸார் மாணவனின் உடைகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

இதே வேளை நேற்றையதினம பல்கலைக்கழகவளாகத்தைச் சுற்றிபெருந்திரளான படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன் மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டத்தையும வீடியோமூலம் படம் பிடித்தனர்.

இதுஇவ்வாறிருக்க அனைத்துப பீடமாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் நேற்று இருதடவைகள்கைலாசபதி அரங்கில் நடைபெற்றதும இங்குகுறிப்பிடத்தக்கது. [வ-6-5]

### சுட்டுக் கொலை

எழுதுமட்டுவாள் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இராணுவ சிப்பாயொருவர் சகசிப்பாயால் சுட்டுக் கொல்லப்பட்டார். (ந-6)

### பெண்கள்

செம்மணி 'மிருசுவில் ஆகிய இடங்களில் மக்களை கொன்று புதைத்தது போன்று, வெளிச்சத்துக்கு வராத சோதனைச் சாவடிச் சம்பவங்களும் அதிகரிக்கின்றன

யுத்தப்பிரதேசங்களில் மட்டுமன்றி மலையகம், கொழும்பு ஆகிய இடங்களிலும் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளன.

உள்ளூர் வெளியூர் அமைப்புக்கள் மனிதஉரிமை நிறுவனங்கள் பெண்கள் மீதான பாலியல் சம்பவத்திற்கு கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

இதனை அரசாங்கம் உதாசீனம் செய்ததுடன் இதற்கு எதிராக ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு இடரீதியான பேதம் பாராது அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஒருமனத்தவராய் ஒருமித்த கண்டனத்தை தெரிவிப்போமென அவ் அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (இ)

...நடவடிக்கை எடுக்கவேண்டிய இக்கட்டான சூழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

### படையினர்

கொளுத்தும் வெயிலில்மக்கள் பெரும் சிரமத்தை அனுபவித்தனர்.

யாழ் பல்கலைக்கழக வீதியெங்கும் வீடுவீடாக குடும்பப் பதிவு அட்டைகள் பார்வையிடப்பட்டதுடன் தீவிர சோதனைகளும் இடம் பெற்றது.

கரும்புலிகள்தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் யாழ். குடாநாட்டில் தாக்குதல்களில் ஈடுபடலாம் என்ற அச்சம் காரணமாகவே சோதனைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. (இ-10)

### வன்னியில் . . .

ளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

கடலிலும் தரையிலும்சாதனைபடைத்த 217 கரும்புலிகளும் இன்றைய தினம் நினைவுகூரப்படவுள்ளதுடன் அவர்களது உருவப் படங்களுக்கு மக்கள் மலர்மாலை அணிந்து வணக்கம் செலுத்தவுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (ம)

### ஆகஸ்ட் . . .

ரவூப்ஹக்கீம் உட்பட கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை அடுத்தமாதம்7,8,9,10ம்திகதிகளிலவிவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற அரசின் அறிவிப்பை எதிர்க்கட்சியினர் ஏற்காது இம்மாதம்3ம் வாரத்திலேயே நடத்த வேண்டுமென்று கோரியுள்ளனர்.

இதனைஅடுத்து எவ்வித முடிவும் இன்றிநேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டம் முடிவடைந்ததுடன் இதுதொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை மீண்டும் சந்தித்துப் பேசுவதென தீர்மானிக்கப் பட்டது.(வ)

## பாலியல்வல்லுறவு சம்பவம் ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டனம்

(கொழும்பு)

தமிழ் பெண்கள் மீதுதொடரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பொலிஸ் சட்டங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீளாய்வு செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளதாக ஈ.பி.ஆர்.எவ் வரதர் அணியினர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு சம்பவத்தை கண்டித்து, ஈ.பி.ஆர். எல் எப். நேற்று வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

துண்டுபிரசுரத்தில் மேலும தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

இனமுரண்பாடுகள் கூர்மையாக வளர்ந்ததற்கு பொலிஸ் மற்றும் இராணுவத்தின் கட்டாக்காலித் தனமான கொடூரங்களும் அதனை கடந்தகாலத்தில் ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாமல் இருந்தமையுமே காரணமென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

## சடலமாக மீட்பு

[புலோலி]

அல்வாய் கிழக்கு பகுதியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து இளம் குடும்பப் பெண்ஒருவர் கடந்த திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அல்வாய் கிழக்கைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின்தாயான மல்லிகாதேவி தவராசா என்பவரே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸர்மேற்கொண்டு வருகின்றனர். [ந-52]

## ஹர்த்தாலுக்கு ஆதரவு தருமாறு சித்தார்த்தன் கோரிக்கை

[வவுனியா]

இராணுவத்தினரின் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவத்தை கண்டித்து வடக்குகிழக்குஉட்பட கொழும்பிலும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள எதிர்ப்பு நாளுக்கு அனைத்து தமிழ் மக்களும் ஆதரவு வழங்கி ஹர்த்தாலை வெற்றியடையச் செய்ய வேண்டுமென்று புளொட் அமைப்பின் தலைவரும் முன்னாள்எம்பியுமான த. சித்தார்த்தன் விடுத்த அறிக்கை ஒன்றில் வேண்டுகோளை விடுத்துள்ளார் அவ் வேண்டுகோளில் அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது.

தமிழ் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவில்இக் ஹர்த்தால் நடை பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [வ]

### அவசரகால . . .

காலநீடிப்புப் பிரேரணை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்படக்கூடிய சூழ்நிலை தென்படுவதால் ஜனாதிபதி சந்திரிக்கா அதற்குரியமாற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க அவசர காலநில நீடிப்புப் பிரேரணை தோல்வியடைவதிலிருந்து அரசு தன்னை மீட்டுக் கொள்வதற்காகவே ஜனாதிபதி தனது விசேட அதிகாரத்தின் கீழ் 14 நாட்களுக்கு பிரேரணையை ஒத்தி வைத்திருப்பதாகவும்;

பாராளுமன்றத்தில் அவசர கால நீடிப்புப்பிரேரணை சமர்ப்பிக்கப்படமாட்டாது என்று கூறிவிட்டு அன்றைய தினம் (6ஆம் திகதி) அப்பிரேரணையைத் திடீரென பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றக் கூடிய வழிமுறைகளைக் கொண்டு எதிர்க்கட்சிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்த ஜனாதிபதி சந்திரிகா முனைந்துள்ளாரென்றும் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## முதலுதவி

தற்போது நடை பெற்று வரும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்தில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் முதலுதவி உயிர்காப்பு சேவையில்ஈடுபட்டுள்ளனர். மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் உதவி மாவட்ட ஆணையாளர் ஆர். அசோகன் தலைமையில் சுமார் 150இற்கும் மேற்பட்டோர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். [உ-104]

### ஐ. தே. க . . .

கையளிக்கவே ரணில் ஆட்சியைக் கைப்பற்ற ரணிலிடம் நாட்டை ஒப்படைத்து தமிழ் ஈழம் உருவாகும் ரவூப்ஹக்கீம் எங்களுக்கு வேணடாம் போன்ற கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர். (வ)


சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 125ம் ஆண்டுநிறைவையொட்டி விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

மாபெரும் சுற்றுப் போட்டிகள்- 2001

1) கிரிக்கெட் (மென்பந்து7பேர் கொண்ட 12 பந்துப் பரிமாற்றம்)
2) வலைப்பந்தாட்டம்;
3) கரப்பந்தாட்டம். (செற்றப் முறை):
விண்ணப்ப முடிவு திகதி 15-07-2001

மேலதிக விபரங்களிற்கு கல்லூரியின் . கழகக் காரியாலயத்துடன் தொடர்பு கொளளவும்.

நிர்வாகம்
(கி/ 2182)



தங்க நகையுலகில் தமக்கென தனியிடம் பிடித்தவர்கள்

விநோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P - Fax - 2824 (சி-5123)


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலைமாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது